# சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு

# பதவி வெற்றிடங்கள்

## முகாமையாளர் (வசந்தம் தொலைக்காட்சி) - ஒப்பந்த அடிப்படை

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு ஆனது, இலங்கையில் சிங்களம் மற்றும் தமிழ் பேசும் சமூகங்களுக்குச் சேவையாற்றும் வகையில் இரண்டு தொலைக்காட்சி அலைவரிசைகளையும் (ஐரினன் மற்றும் வசந்தம் தொலைக்காட்சி) இரண்டு வானொலி அலைவரிசைகளையும் (லக்ஹண்ட மற்றும் வசந்தம் எ.ஃப்.எம்) இயக்குவதுடன், சமூக ஊடக செயற்பாடுகளுக்காக "ஐரினன் டிஜிட்டல்" அலைவரிசையையும் இயக்கி வரும் ஒரு முதன்மை ஊடக வலையமைப்பாகும்.

டிஜிட்டல் கல்வியில் சிறந்த நிலையை அடைவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ள "MMC ITN கேம்பஸ்" நிறுவனத்தையும் ஐரினன் இயக்குகின்றது. நவீன பார்வையாளர்களுக்காக டிஜிட்டல் பொழுதுபோக்கை மறுவரையறை செய்யும் இந்த வலையமைப்பின் OTT தளமான "ITN மேக்ஸ்" என்பது, ஐரினன் ஊடகத் தொகுப்பின் அண்மைய சேர்க்கையாகும்.

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் காணப்படும் பின்வரும் பதவிக்காக, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையும் அனுபவங்களையும் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### முகாமையாளர் (வசந்தம் தொலைக்காட்சி) - ஒப்பந்த அடிப்படை

முகாமையாளர் (வசந்தம் தொலைக்காட்சி), தொடர்புடைய அனைத்து நிகழ்ச்சி முகாமைத்துவ பணிகளையும் மேற்பார்வை செய்யும் அதேவேளை வசந்தம் தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளுக்கான கருத்துருவாக்கம், திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் தயாரிப்பு ஆகியவற்றை வழிநடத்துவதற்கும் பொறுப்பாக இருப்பார். அலைவரிசையின் தொலைநோக்கு மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கு அமைவாக, உயர்தர உள்ளடக்கங்களை வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, அனைத்து நிகழ்ச்சித் தயாரிப்பு நடவடிக்கைகளையும் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், நடைமுறைப்படுத்துதல், வழிநடத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் ஆகியவை இப்பணிப் பொறுப்பில் உள்ளடங்கும்.

**கல்வித் தகைமைகள்**

இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இதழியல் (Journalism), வெகுசனத் தொடர்பாடல் (Mass Communication), திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் தயாரிப்பு (Film and Television Production), தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு (Television Programme Production) ஆகிய விடயத்துறையொன்றில் பெற்றுக்கொண்ட கலைமாணிப் பட்டம்.

**அத்துடன்**

மேற்கூறப்பட்ட விடயத்துறையொன்றில், இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முதுமாணிப் பட்டம்.

**மற்றும்**

ஒரு கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை அல்லது ஒரு புகழ்பெற்ற நிறுவனத்தில் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பன்னிரண்டு (12) வருட கால அனுபவம்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

மேற்குறிப்பிட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரிய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு நிறுவனத்தில் பதவியுடன் தொடர்புடைய துறையில், முகாமையாளர் சேவை வழுதி (MM 1-1) தரம் I பதவியொன்றில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடங்கள் திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அத்துடன்**

இரண்டாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

**வயதெல்லை**

35 வயதுக்குக் குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு ஆகக்கூடிய வயதெல்லை பரீட்சையில் ஏற்புடையதாகாது.

**ஒப்பந்தக் கொடுப்பனவு**

அடிப்படை மாதாந்தக் கொடுப்பனவு: ரூபா 123,019/- + வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு: ரூபா 17,800/- (முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல: 01/2025 இன் அட்டவணை II க்கு இணங்க திருத்தப்பட்ட அடிப்படைச் சம்பளத்தின் அடிப்படையில்)

குறிப்பு 01 : தமிழ் மொழியில் சிறந்த தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு 02 : இப்பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் ஓராண்டு (01) காலப் பகுதிக்கு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதுடன், செயலாற்றுகையின் அடிப்படையில் இந்த ஒப்பந்த உடன்படிக்கை வருடாந்த அடிப்படையில் புதுப்பிக்கத்தக்கதாகும்.

**இதர நன்மைகள்**

01. நிறுவன ஒழுங்கு விதிகளுக்கு அமைவாக மாதாந்த வருகை ஊக்குவிப்புக் கொடுப்பனவு.
02. பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு, PED சுற்றறிக்கை இலக்கங்கள் 01/2015, 1/2015(I) மற்றும் 1/2015(II) ஆகியவற்றிற்கு இணங்கப் பொருந்தக்கூடிய போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.
03. விபத்துகளுக்கான 24 மணித்தியால காப்புறுதிக் காப்பு.
04. ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பாக ஊழியரால் 10% மற்றும் தொழில் வழங்குநரால் 15%.
05. ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திற்கு தொழில் வழங்குநரால் 3% பங்களிப்பு.

**பொது நிபந்தனைகள்**

01. அரச / சேவை / அரச கூட்டுத்தாபனங்கள் அல்லது நியதிச்சட்ட சபைகளில் பணிபுரிபவர்கள் தங்களது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்களின் ஊடாகவே சமர்ப்பிக்க வேண்டும்.
02. பெயர், முகவரி, வயது, கல்வி / தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம் ஆகியவற்றின் முழுமையான விபரங்களைக் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவங்களை (தொடர்புடைய அனைத்துக் கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகளுடன்), 2026 ஜுலை 13 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக, பிரதிப் பொது முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்), சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு, விக்கிரமசிங்கபுர, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
03. அத்துடன், தொடர்புடைய கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஆகியவற்றின் விண்ணப்பப்படிவத்தை 2026 ஜுலை 13 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ itnadm@itn.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்ய முடியும். மின்னஞ்சலின் தலைப்பு வரியில் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.
04. தொடர்புடைய கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்**
**சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு,**
**விக்கிரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**
**2026 ஜுலை 02**